# சேவா வாணி

## ஆகஸ்ட் - 2026



**ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)**

**தமிழ்நாடு - தெற்கு**

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

[29 மார்ச் 1981 (தெலுங்கு புத்தாண்டு நல்வாழ்த்துகள்)]
(தொடர்ச்சி ...)

எனது அன்பிற்குரிய ஆசிரியர்களே மற்றும் மாணவர்களே!

யாருடைய உதடுகளில் எப்போதும் ஸாயியின் நாமம் இருக்கிறதோ, அவர் 'ஜீவன் முக்தர்' (வாழ்விலேயே முக்தி அடைந்தவர்) ஆவார். ஏனெனில், ஸாயியைத் தொடர்ந்து நினைவுகூர்வது அகந்தை உணர்வை அகற்றி, என்றும் அழிவற்றதும் மாற்றமற்றதுமான தனது உண்மையான சுயத்தை உணர வழிவகுக்கிறது.

நாமஸ்மரணம் என்பது பக்தனுக்கும் ஸாயிக்கும் இடையிலான ஒரு இணைப்புப் பாலமாகும். அது பக்தனை ஸாயியுடன் நேருக்கு நேர் கொண்டு சேர்ப்பதுடன், அவரும் (ஸாயியும்) தானும் ஒன்றே என்ற ஞானத்தை அடையச் செய்கிறது.

அன்புடன்,
உங்கள் ஸாயி,
உங்களுடைய ஸாயி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம், தமிழ்நாடு தெற்கில் இருந்து **3** பிரிவுகளிலும் மொத்தம் **102** தனித்துவமான செயல்பாடுகள் **ஆகஸ்ட் 2026** -இல் நடந்தன



| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு | கல்விப் பிரிவு |
|---|---|---|
| 55 | 37 | 10 |

# பொருளடக்கம்


தமிழ்நாடு தெற்கு .......... 5

விழுப்புரம் .......... 7

தூத்துக்குடி .......... 12

திருவண்ணாமலை .......... 13

திருப்பூர் .......... 22

திருநெல்வேலி .......... 43

திருச்சி .......... 46

திண்டுக்கல் .......... 56

தஞ்சாவூர் .......... 61

கோயம்புத்தூர் .......... 70

காஞ்சிபுரம் வடக்கு .......... 86

காஞ்சிபுரம் தெற்கு .......... 96

கரூர் .......... 111

ஈரோடு .......... 117

# பிரேம தரு - பசுமை சேவை

**தமிழ்நாடு தெற்கு** **12.07.2026**

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் தெய்வீக ஆசியுடன் தமிழ்நாடு தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பல்வேறு மாவட்டங்களில் பிரேம தரு மரக்கன்று நடும் சேவைத் திட்டம் 2026 ஜூலை 12 முதல் ஆகஸ்ட் 9 வரை சிறப்பாக நடைபெற்றது. அனைத்து மாவட்டங்கள், சமிதிகள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் ஒத்துழைப்புடன் மொத்தம் 27,484 மரக்கன்றுகள் நடப்பட்டன.

இதில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்துடன் இணைந்து தர்மபுரியில் 770, திருச்சியில் 700 மற்றும் மதுரையில் 1,260 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் மாவட்டங்கள் வாரியாகச் சேலத்தில் 8,520, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் 6,730, கோயம்புத்தூரில் 4,550, ஈரோட்டில் 2,054, விருதுநகரில் 1,000, திண்டுக்கல்லில் 750, திருநெல்வேலியில் 700, திருப்பூரில் 403, விழுப்புரத்தில் 200, திருவண்ணாமலையில் 72, காஞ்சிபுரம் வடக்கில் 30 மற்றும் தூத்துக்குடியில் 5 மரக்கன்றுகள் நடப்பட்டன.

மனித சேவையே மாதவ சேவை என்ற பகவானின் உயரிய கொள்கையின்படி எதிர்காலத் தலைமுறைக்காகப் பசுமையான சூழலை உருவாக்கும் நோக்கில் இச்சேவை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.


GPS Map Camera
Chaparthi, Tamil Nadu, India
C47w+mh7, Chaparthi, Tamil Nadu 635106, India
Lat 12.411909° Long 78.145207°



# திருவிளக்கு பூஜை

**விழுப்புரம்** **99 சேவாதளத்தொண்டர்கள்**

மாநில அமைப்பின் வழிகாட்டுதலின்படி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சமிதிகள் மற்றும் பஜனை மண்டலிகளில் ஆடி மாதத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் சிறப்புத் திருவிளக்கு பூஜை பக்தியுடன் நடைபெற்றது. இதில் மொத்தம் 99 மகளிர் கலந்துகொண்டு பகவானின் பேரருளைப் பெற்றனர்.





# கரிஷ்யே வசனம் தவ - வேர்களை நோக்கி

விழுப்புரம்

08.08.2026 | 300 சேவாதளத்தொண்டர்கள்

08.08.2026 அன்று விழுப்புரத்தில் கரிஷ்யே வசனம் தவ வேர்களை நோக்கி என்ற தலைப்பில் சிறப்பு சாதனா முகாம் சிறப்பாக நடைபெற்றது. பிரசாந்திக் கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்நிகழ்வில் 300 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

முகாமில் கிராமப்புற மாணவர்களின் திறன் மேம்பாடு, கல்வி, ஆன்மிகம், மருத்துவம் மற்றும் பிரசாந்தி நிலைய சேவை ஆகியவை குறித்த பயனுள்ள கருத்துரைகள் வழங்கப்பட்டன. மாலையில் மகா மங்கள ஆரத்தியுடன் முகாம் நிறைவு பெற்றது.



# ஸ்ரீ சூரிய காயத்ரி பாராயணம்

விழுப்புரம் | 23.08.2026 | 92 சேவாதளத்தொண்டர்கள்

மாநில அமைப்பின் வழிகாட்டுதலின்படி, 23.08.2026 அன்று விழுப்புரம் மாவட்டத்தின் அனைத்துச் சமிதிகளிலும் சிறப்பு ஸ்ரீ சூரிய காயத்ரி பாராயணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் மொத்தம் 92 நபர்கள் கலந்துகொண்டு பகவானின் திருவருளைப் பெற்றனர்.



# பிரேம தரு

## விழுப்புரம்

விழுப்புரம் சமிதி சார்பில் பிரேம தரு திட்டத்தின் கீழ் விழுப்புரம் இ.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மரக்கன்று நடும் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் சுமார் 75 நபர்களுடன் சமிதி உறுப்பினர்களும், மாவட்ட மற்றும் மாநிலப் பொறுப்பாளர்களும் ஒன்றிணைந்து 200 மரக்கன்றுகளை நட்டனர்.

# புதிய பஜனை மண்டலிகள் துவக்கம்

## விழுப்புரம்

26.08.2026 மற்றும் 29.08.2026 ஆகிய தேதிகளில் எ.கோட்டை சமிதிக்குட்பட்ட அலங்கிரி மற்றும் கொந்தாமூர் சமிதிக்குட்பட்ட ஒலக்கூர் ஆகிய கிராமங்களில் புதிய பஜனை மண்டலிகள் சிறப்பாகத் தொடங்கப்பட்டன. மாநில சேவை ஒருங்கிணைப்பாளர் சிறப்புரையாற்றினார். நிகழ்வின் நிறைவாகப் பக்தர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது.



# காயத்ரி மந்திரம் ஜபம்

தூத்துக்குடி | 23.08.2026
10 பயனாளிகள் | 30 சேவாதளத்தொண்டர்கள்

23.08.2026 அன்று உலக நன்மைக்காகவும் மழை வேண்டியும் கோவில்பட்டி டவுன் சமிதி சார்பில் ராஜீவ் நகர் பிள்ளையார் கோவில் வளாகத்தில் காயத்ரி மந்திர ஜபம் நடைபெற்றது.

இதில் 25 பாலவிகாஸ் மாணவ மாணவிகளும் 10 சமிதி அன்பர்களும் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் சுவாமியின் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.



# இலவச கண்புரை அறுவை சிகிச்சை தேர்வு முகாம்

திருவண்ணாமலை | 02.08.2026 | 55 பயனாளிகள் | 12 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு 02.08.2026 அன்று சென்னை பம்மல் சங்கரா மருத்துவக் குழுவினர் மூலம் இலவசக் கண்புரை அறுவை சிகிச்சை தேர்வு முகாம் நடைபெற்றது.

முகாமில் 55 நபர்கள் பரிசோதனை செய்துகொண்டனர். அவர்களில் 14 ஆண்கள் மற்றும் 12 பெண்கள் என மொத்தம் 26 நபர்கள் அறுவை சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டுச் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 3 நபர்களுக்கு இலவசக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. முகாமில் கலந்துகொண்ட அனைவருக்கும் தேநீர், சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டன.

# ஸ்ரீ சத்ய சாய் தன்வந்திரி மருத்துவ முகாம்

திருவண்ணாமலை | 09.08.2026 | 35 பயனாளிகள் | 3 சேவாதளத்தொண்டர்கள்

திருவண்ணாமலை ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில் ஸ்ரீ சத்ய சாய் தன்வந்திரி திட்டத்தின் கீழ் நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் தைராய்டு குறைபாடுகளுக்கான மருத்துவ முகாம் 09.08.2026 அன்று நடைபெற்றது. மருத்துவர் கமலக்கண்ணன் அவர்கள் நோயாளிகளைப் பரிசோதித்துச் சிகிச்சையளித்தார். முகாமில் 35 நபர்களுக்கு மூன்று மாதங்களுக்குத் தேவையான மருந்துகள் பகவானின் பிரசாதமாக வழங்கப்பட்டதுடன், சனாதன சாரதி இதழும் வழங்கப்பட்டது.





# கிரிவல பக்தர்களுக்கு பிரசாத விநியோகம்

திருவண்ணாமலை
27.08.2026
பொதுமக்கள் பயனாளிகள்
8 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 27.08.2026 அன்று திருவண்ணாமலைக் கிரிவலப் பாதையில் கிரிவலம் வந்த பக்தர்களுக்குப் பால் பிரசாதமாக வழங்கப்பட்டது.



# மாவட்ட அளவிலான குரூப்-1 குருமார்களுக்கான பயிற்சி முகாம்

**திருவண்ணாமலை**

**26.08.2026** **6 சேவாதளத்தொண்டர்கள்**

பகவான் பாபாவின் திருவருளால் திருவண்ணாமலை மாவட்ட அளவிலான குரூப் 1 பாலவிகாஸ் குருமார்களுக்கான பயிற்சி முகாம் 26.08.2026 அன்று சேத்துப்பட்டு சாந்தா வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 6 குருமார்கள் பயிற்சி வழங்கினர். இதில் திருவண்ணாமலை மாவட்ட சமிதிகள் மற்றும் பள்ளிகளைச் சேர்ந்த குருமார்கள் கலந்துகொண்டனர். முன்னாள் வேலூர் மாவட்டக் கல்வி ஒருங்கிணைப்பாளர் திரு. நடராஜன் மற்றும் பள்ளித் தாளாளர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





V-A
NO. on Roll : 39
NO. Present : 38
NO. Absent : 01
ஸ்ரீ சத்யசாய் சேவா நிறுவனம்
தமிழ்நாடு
குருமார்களுக்கான பயிற்சி பட்டறை
குழுப் -1

# சங்கடஹர சதுர்த்தி சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை

திருவண்ணாமலை

02.08.2026 | 25 சேவாதளத்தொண்டர்கள்

02.08.2026 அன்று சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு ஸ்ரீ சாய் விக்னேஸ்வரருக்குச் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை சிறப்பாக நடைபெற்றது.



# பௌர்ணமி சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை**

**27.08.2026** **27 சேவாதளத்தொண்டர்கள்**

27.08.2026 அன்று பௌர்ணமியை முன்னிட்டுச் சத்யநாராயண பூஜை, சுவாமிக்குச் சிறப்பு அபிஷேகம், பஜனை மற்றும் நாராயண சேவை ஆகியவை நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமியின் அருள் பெற்றனர்.

# சிறப்பு பஜன் மற்றும் நாராயணசேவை

திருவண்ணாமலை | 30.08.2026 | 150 பயனாளிகள் | 22 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு, 30.08.2026 அன்று திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சமிதி சார்பில் இரும்பேடு மாரியம்மன் கோவிலில் சிறப்பு பஜனை மற்றும் நாராயண சேவை சிறப்பாக நடைபெற்றது.





# காயத்ரி ஜெபம்

திருவண்ணாமலை

23.08.2026 60 சேவாதளத்தொண்டர்கள்

23.08.2026 அன்று திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை, வேங்கிக்கால், ஆரணி மற்றும் வைப்பூர் ஆகிய சமிதிகளில் காயத்ரி மந்திர ஜபம் மேற்கொள்ளப்பட்டது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள், மகளிர் மற்றும் ஆண்கள் கலந்துகொண்டனர்.





# இலவச கண் சிகிச்சை முகாம்

**திருப்பூர்** | **02.08.2026** | **150 பயனாளிகள்**

பிரதி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இலவசக் கண் பரிசோதனை முகாம் 02.08.2026 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. முகாமில் 150 நபர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் அறுவை சிகிச்சைக்கு 18 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் 62 நபர்களுக்குக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. முகாமின்போது பிரசாந்தி சேவை மற்றும் குருதிக்கொடை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# 108 ருத்ர பாராயணம்

**திருப்பூர்**

**03, 11, 14.08.2026** | **200 சேவாதளத்தொண்டர்கள்**

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக, திருப்பூர் மாவட்டத்தில் 108 திருக்கோவில்களில் ருத்ர பாராயணம் செய்வது என முடிவு செய்யப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மாத நிகழ்வுகளாக, 94-வது ஏகாதச ருத்ர பாராயணம் பெருமாநல்லூரில் உள்ள கோவர்த்தனாம்பிகை உடனமர் உத்தமலிங்கேஸ்வரர் ஆலயத்திலும், 95-வது ஏகாதச ருத்ர பாராயணம் பல்லடம் அருளானந்த ஈஸ்வரர் ஆலயத்திலும், 96-வது பாராயணம் வேதாரண்யம் அருகிலுள்ள கோடியக்கரை குழகர் கோவிலில் அமிர்தகடேஸ்வரர் ஆலயத்திலும், 97-வது பாராயணம் வேதாரண்யத்தில் உள்ள வேதநாயகி உடனமர் வேதாரண்யேஸ்வரர் ஆலயத்திலும், 98-வது பாராயணம் திருவாரூர் தியாகராஜர் கோவிலில் வன்மீகநாதர் சன்னதி முன்பும், 99-வது ஏகாதச ருத்ர பாராயணம் சுவாமி தனது 60-வது வயதில் தத்தெடுத்த கிராமமான நீலகிரி மாவட்டம் மேலூர் ஒசஹட்டி கிராமத்தில் உள்ள மகாலிங்கேஸ்வரர் ஆலயத்திலும் நடைபெற்றன.

# குருமார்களுக்கான குரூப்-1 பயிற்சி முகாம்

திருப்பூர் | 09.08.2026 | 91 சேவாதளத்தொண்டர்கள்

09.08.2026 அன்று திருப்பூர் ராம் நகர் சாய் மந்திரில் திருப்பூர் மாவட்ட அளவிலான பாலவிகாஸ் குருமார்களுக்கான குரூப் 1 பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 35 குருமார்கள், 20 குரூப் 4 மாணவர்கள், 18 பெற்றோர், 7 சமிதி அமைப்பாளர்கள் மற்றும் 10 உறுப்பினர்கள் என மொத்தம் 91 பேர் கலந்துகொண்டனர்.





# பால விகாஸ் குருப் 1&2 தேர்வுகள்

திருப்பூர் 30.08.2026

30.08.2026 அன்று குழந்தைகளுக்கு பாலவிகாஸ் குருப் 1 மற்றும் 2 தேர்வுகள் சிறப்பாக நடைபெற்றன.





Love All, Serve All
Help Ever, Hurt Never

சேவா வாணி
ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)
தமிழ்நாடு - தெற்கு

ஆகஸ்ட் 2026

# கண் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

திருப்பூர் | 23.08.2026 | 31 பயனாளிகள்

கடந்த 13.08.2026 அன்று பெருந்தொழுவு அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்குக் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. அதில் 31 மாணவர்களுக்குக் கண் கண்ணாடிகள் வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி 23.08.2026 அன்று மேற்கண்ட கண்ணாடிகளை சேரன் நகர் சமிதி அமைப்பாளர் திரு. வெங்கடேஷ் அவர்கள் நேரில் சென்று வழங்கினார்.



# பேரிடர் மேலாண்மை பயிற்சி விழிப்புணர்வு முகாம்

திருப்பூர் | 23.08.2026 | 36 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்ரீ சத்ய சாய் பாலவிகாஸ் குரூப் 3 தேர்வு எழுதும் மாணவர்களுக்கான பேரிடர் மேலாண்மை பயிற்சி விழிப்புணர்வு முகாம் 23.08.2026 அன்று பி.என். ரோடு ராம் நகர் சாய் மந்திரில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டப் பேரிடர் மேலாண்மைப் பயிற்சியாளர்களைக் கொண்டு இந்நிகழ்வு சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் 12 பாலவிகாஸ் மாணவிகள், 15 மாணவர்கள், பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என மொத்தம் 36 பேர் கலந்துகொண்டனர்.

## மருத்துவ முகாம் மற்றும் தேனீ வளர்ப்பு பயிற்சி

திருப்பூர் | 23.08.2026 | 77 சேவாதளத்தொண்டர்கள்

23.08.2026 அன்று உடுமலைப்பேட்டை அருகிலுள்ள ஈசல்திட்டை கிராமத்தில் மருத்துவ முகாம் மற்றும் தேனீ வளர்ப்புப் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. கோவையிலிருந்து வருகை தந்த மருத்துவர்கள் பங்கேற்ற மருத்துவ முகாமில் சுமார் 77 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இதில் மகளிர் சிறப்பு மருத்துவம், எலும்பு முறிவு மருத்துவம் மற்றும் பொது மருத்துவம் ஆகிய பிரிவுகளில் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் 20 முதல் 25 நபர்களுக்குத் தேனீ வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களுக்கு நான்கு செட் தேன்கூடுகள், கையுறைகள் மற்றும் தேன்கூடு நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் சிறப்பு நாராயண சேவை வழங்கப்பட்டது.





# காயத்ரி மந்திர ஜபம்

திருப்பூர் 23.08.2026 100 பயனாளிகள்

மாநில வழிகாட்டுதலின்படி உலக நன்மைக்காக 23.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று திருப்பூர் மாவட்டத்தில் 10 இடங்களில் காயத்ரி மந்திர ஜபம் சிறப்பாக நடைபெற்றது.

## 108 திருவிளக்கு பூஜை

திருப்பூர்

03, 07, 11, 14, 21.08.2026

300 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக, திருப்பூர் மாவட்டத்தில் 108 திருவிளக்கு பூஜைகள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மாத நிகழ்வுகளாக 71-வது திருவிளக்கு பூஜை 03.08.2026 அன்று தாராபுரம் சமிதி மற்றும் ரெட்டாவலசு பஜனை மண்டலி சார்பாகப் புளியவலசிலும், 72-வது பூஜை நல்லூர் பஜனை மண்டலியிலும், 73-வது பூஜை 07.08.2026 அன்று காந்திநகர் சமிதியிலும், 74-வது பூஜை 07.08.2026 அன்று முத்து நகர் சமிதியிலும், 75-வது பூஜை 11.08.2026 அன்று ராயபுரம் சமிதியிலும், 76-வது பூஜை 13.08.2026 அன்று குளத்துப்பாளையம் சமிதி சார்பாகத் திருமதி விமலா இல்லத்திலும் நடைபெற்றன.

தொடர்ந்து 77-வது பூஜை 14.08.2026 அன்று குளத்துப்பாளையம் சமிதியிலும், 78-வது பூஜை இருகண்துரை இசக்கியம்மன் கோவிலிலும், 79-வது பூஜை லட்சுமி நகர் பஜனை மண்டலியிலும், 80-வது பூஜை சத்யா காலனி பஜனை மண்டலியிலும், 81-வது பூஜை முத்து நகர் சமிதி சார்பாகத்

திருமதி ஜோதி சாய்ராம் இல்லத்திலும் நடைபெற்றன. மேலும் 82-வது பூஜை 21.08.2026 அன்று முத்து நகர் சமிதியிலும், 83-வது பூஜை காந்திநகர் சமிதியிலும், 84-வது பூஜை பல்லடம் ரோடு யூனிட் 2 சமிதியிலும் சிறப்பாக நடைபெற்றன.



# பள்ளிகளில் இலவச கண் சிகிச்சை முகாம்

திருப்பூர் | 05, 13, 14, 19.08.2026 | 3555 பயனாளிகள்

ஆண்டுதோறும் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசுப் பள்ளி மாணவ மாணவிகளுக்கான இலவசக் கண் சிகிச்சை முகாம் இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற்றது.

ஆகஸ்ட் மாத நிகழ்வுகளாக 9-வது முகாம் 05.08.2026 அன்று பூலுவபட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் 862 குழந்தைகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டு, 43 குழந்தைகளுக்குக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 10-வது முகாம் 05.08.2026 அன்று பாண்டியன் நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 687 குழந்தைகளுக்கு நடத்தப்பட்டு, 31 குழந்தைகளுக்குக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

11-வது முகாம் 13.08.2026 மற்றும் 14.08.2026 ஆகிய தேதிகளில் பெருந்தொழுவு அரசு மேல்நிலைப் பள்ளியில் 963 மாணவர்களுக்கு நடத்தப்பட்டு, 48 குழந்தைகளுக்குக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 12-வது முகாம் 19.08.2026 அன்று என்.ஆர்.கே. புரம் நகராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் 1,043 குழந்தைகளுக்கு வெற்றிகரமாக நடத்தப்பட்டது.




Time is Gold.
VIII A

# சுதந்திர விடுதலை வேட்கை

திருப்பூர் | 13, 14, 15.08.2026 | 500 பயனாளிகள்

அகில இந்திய அளவில் செயல்படும் ஸ்ரீ சத்ய சாய் பள்ளிகள் சார்பில் சுதந்திர மனப்பான்மை நிகழ்ச்சி நடத்த முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் 2026 ஆகஸ்ட் 13, 14, 15 ஆகிய தேதிகளில் சுதந்திர மனப்பான்மை தொடக்க விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மாநிலத் தலைவர் திரு. கே.ஆர். சுரேஷ் மற்றும் மாநில ஆன்மிகப் பொறுப்பாளர் திருமதி பிரசாந்தி பூவையா ஆகியோர் கலந்துகொண்டு மூன்று நாள்கள் நடைபெற்ற சுதந்திர தினச் சிறப்புக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தனர்.

ஸ்ரீ சாய் பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவ மாணவிகள் மற்றும் ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவன உறுப்பினர்கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஆகஸ்ட் 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் நிகழ்ச்சி நிரலின்படி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.


AUM SRI SAI RAM
SAI SIRPI
Spirit of Independence
Sri Sathya Sai National Council for Schools
Sri Sai Matriculation Higher Secondary School
Tirupur



# பிரசாந்தி பாதுகாப்புப் பணி பயிற்சி

திருப்பூர் | 23.08.2026 | 6 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண கிருபையால் கொடைக்கானல் சாய் சுருதியில் இரண்டு நாள்கள் பிரசாந்தி பாதுகாப்பு பயிற்சி முகாம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருப்பூரிலிருந்து 6 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.



# பிரேம தரு - மரம் நடு விழா

திருப்பூர் | 16.08.2026 | 35 சேவாதளத்தொண்டர்கள்

16.08.2026 அன்று பிரேம தரு மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி கொடுவாயில் பசுமை மீட்பு அறக்கட்டளை மற்றும் கொடுவாய் வளம் அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் கலந்துகொண்டு, பகவானின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி முன்னெடுக்கப்பட்ட நித்திய நாராயண சேவை, ஆசைக்கு ஓர் உச்சவரம்பு திட்டத்தின் கீழ் நேரம், நீர், உணவு, பணம், சக்தி ஆகியவற்றை விரயம் செய்யாமல் வாழ்வியல் நெறியாகக் கடைப்பிடிப்பது மற்றும் பிரேம தரு திட்டத்தின் மூலம் ஒரு கோடி மரக்கன்றுகள் நடுவது குறித்து உரையாற்றினார். மரக்கன்றுகளை நட்டு, பஜனை மேற்கொண்டு, மாவட்ட சேவை ஒருங்கிணைப்பாளர் திரு. ரத்தினவேல் அவர்கள் மங்கள ஆரத்தியுடன் விழாவை நிறைவு செய்தார்.

கொடுவாய் வளம் அறக்கட்டளை, பசுமை மீட்பு அறக்கட்டளை, ஸ்ரீ சத்ய சாய் உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் ஊர்ப் பொதுமக்கள் என மொத்தம் 56 நபர்கள் கலந்துகொண்டனர். இதில் குதிரைப்பிடுக்கன் 20, வெப்பாலை 20, பூவரசு 20, வேம்பு 20, புங்கன் 10, முள்சீத்தா 10, மனோரஞ்சிதம் 10, வாகை 10, இலுப்பை 10, கொடுக்காப்புளி

6, சரக்கொன்றை 5, மலைப் பூவரசு 5, தான்றிக்காய் 4, நாட்டு நாவல் 3 என மொத்தம் 153 மரக்கன்றுகள் நடப்பட்டன.





# பல்லக்கு சேவை

திருப்பூர் | 27.08.2026 | 150 சேவாதளத்தொண்டர்கள்

திருப்பூர் மாவட்டத்தில் பௌர்ணமி ரத உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ சத்ய சாய் பிரேம ரதம் 27.08.2026 அன்று சோளிபாளையம் மற்றும் 15 வேலம்பாளையம் வழியாகத் திருவீதி உலா வந்து பி.டி.ஆர். நகர் பாலவிகாஸ் மையத்தை அடைந்தது.

ரத ஊர்வலத்தின்போது பக்தர்கள் வழிநெடுக மலர் தூவி சுவாமியை வரவேற்றனர். தொடர்ந்து பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பெற்றோர்கள், குழந்தைகள் மற்றும் சாய் பக்தர்கள் என 150-க்கும் மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டனர்.





# பிரேம ரதம் வருகை

**திருப்பூர்**

**26 to 31.08.2026** | **1000 சேவாதளத்தொண்டர்கள்**

ஈரோடு மாவட்டம் சித்தோட்டிலிருந்து ஸ்ரீ சத்ய சாய் பிரேம ரதத்தை வரவேற்பதற்காகத் திருப்பூர் சாய் அன்பர்கள் 30 பேர் காலை ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனம் நிறைவுசெய்து சித்தோடு சென்றனர். காலை 9.15 மணிக்கு மேல் 10 சாய் இளைஞர்கள் இருசக்கர வாகன அணிவகுப்புடன் சுவாமியின் பிரேம ரதத்தை அவிநாசியிலிருந்து அழைத்து வந்தனர்.

ராம் நகர் சாய் மந்திரில் பூரண கும்ப மரியாதையுடனும் மங்கள வாத்தியங்கள் முழங்கவும் பாலவிகாஸ் குழந்தைகள், குருமார்கள், பொறுப்பாளர்கள், மகளிர், உறுப்பினர்கள் மற்றும் சாய் அன்பர்கள் என 250 பேர் சுவாமியை அன்புடன் வரவேற்றனர். தொடர்ந்து பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் மகளிர் நிகழ்த்திய சாய் கும்மி நிகழ்ச்சி சிறப்பாக அமைந்ததுடன் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

இப்பிரேம ரதம் திருப்பூர் மாவட்டத்தில் திட்டமிட்டபடி ராம் நகர், வேலம்பாளையம், குமரானந்தபுரம், முத்து நகர், ராயபுரம் ஆகிய பகுதிகளில் பவனி வந்த பின்னர், இரண்டு நாள்கள் ஸ்ரீ சாய் பள்ளி வளாகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக நிறுத்தி

வைக்கப்பட்டது. அனைத்து இடங்களிலும் உற்சாக வரவேற்பும் கலை நிகழ்ச்சிகளும் கோலாகலமாக நடைபெற்றன.





# கரிஷ்யே வசனம் தவ

திருநெல்வேலி

09.08.2026 | 62 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பூரண அருளால் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் சார்பில் 09.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று கரிஷ்யே வசனம் தவ நிகழ்ச்சி ஸ்ரீ சத்ய சாய் பாலகோகுலம் பள்ளியில் நடைபெற்றது.

காலை 8.00 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் தொடங்கிய நிகழ்வுகள் மாலை 4.30 மணி வரை நடைபெற்றன. பிரேம தரு திட்டத்தின் கீழ் பள்ளி வளாகத்தில் மாநில ஒருங்கிணைப்பாளர்களால் 7 மரக்கன்றுகள் நடப்பட்டன. மாவட்டத் தலைவரின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது.

மாநில ஆன்மிக ஒருங்கிணைப்பாளர், மாநிலத் துணை ஆன்மிக ஒருங்கிணைப்பாளர், மாநிலக் கல்வி ஒருங்கிணைப்பாளர், மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளர், மாநில சனாதன சாரதி பொறுப்பாளர் மற்றும் மாநில சேவைப் பிரிவு மகளிர் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு தத்தம் பிரிவுகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றங்கள் குறித்துக் கருத்துகளைப்

பகிர்ந்துகொண்டனர். இந்நிகழ்வில் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த 62 பக்தர்கள் கலந்துகொண்டனர்.





# ப்ரேம தரு

திருநெல்வேலி | 03.08.2026 | 70 பயனாளிகள்

பகவானின் பூரண அருளால் திருநெல்வேலி மாவட்ட ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் சார்பில் 03.08.2026 திங்கட்கிழமை ஆடிப்பெருக்கு நன்னாளில் திருக்குறுங்குடி அழகிய நம்பிராயர் கோவிலுக்கு அருகிலுள்ள பூந்தோட்டத்தில் பிரேம தரு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் தென்னை 20, நெல்லி, எலுமிச்சை, வில்வம், பலா மரக்கன்றுகள் மற்றும் 70 பூச்செடிகள் நடப்பட்டன.





# நாராயண சேவை

## திருச்சி

2026 ஆகஸ்ட் மாதத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு திருச்சி மாவட்டம் கே.கே. நகர், ஸ்ரீரங்கம், லால்குடி, தில்லை நகர், கல்லுக்குழி மற்றும் புதுக்கோட்டை முதன்மைச் சமிதிகள் சார்பில் நாராயண சேவைகள் நடைபெற்றன. அன்னை இல்லம், பார்வையற்றோர் இல்லம், லூப்ரா தாமஸ் விழி இழந்தோர் இல்லம், சீராத்தோப்பு பாரதியார் குருகுலம் மற்றும் நேசக்கரம் முதியோர் இல்லம் ஆகிய இடங்களில் உள்ள அன்பர்களுக்கு இல்லங்களிலும் சமிதிகளிலும் தயாரிக்கப்பட்ட இரவுச் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

மேலும் புதுக்கோட்டை பெரியார் நகர் சமிதி சார்பில் ராதாகிருஷ்ணன் அன்பாலயாவில் உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவும், புதுக்கோட்டை முதன்மைச் சமிதி சார்பில் கட்டியாவயல் கிராமத்தில் தயிர்சாதமும் வழங்கப்பட்டன. கே.கே. நகர் சமிதி சார்பில் சுந்தர் நகர் அருவி முதியோர் இல்லத்தில் சிறப்பு மாதாந்திர இரவு உணவு சேவாதளத்தொண்டர்களின் பங்கேற்புடன் அன்போடு பரிமாறப்பட்டது.





# நித்திய நாராயண சேவை

திருச்சி | 40 சேவாதளத்தொண்டர்கள்

திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சி சமிதியில் நித்திய நாராயண சேவை ஆகஸ்ட் மாதத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச்சேவையின் மூலம் நாள்தோறும் 40-க்கும் மேற்பட்ட பயனாளிகள் சுவாமியின் அருள்பிரசாதத்தைப் பெற்றுப் பயனடைந்தனர். இப்பணியில் 3 ஆண் சேவாதளத்தொண்டர்களும் 3 பெண் சேவாதளத்தொண்டர்களும் கலந்துகொண்டு சேவையாற்றினர்.



# கரிஷ்யே வசனம் தவ

திருச்சி | 08.08.2026 | 60 சேவாதளத்தொண்டர்கள்

08.08.2026 அன்று கரிஷ்யே வசனம் தவ நிகழ்ச்சி பக்தி மற்றும் ஆன்மிக உணர்வுடன் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுமார் 60 பக்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மாநில மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு ஆன்மிக சாதனை, சேவைப் பணிகள் மற்றும் ஆன்மிக முன்னேற்றம் குறித்துச் சிறப்புரையாற்றினர்.

பங்கேற்ற அனைவருக்கும் காலை சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் மாலை சிற்றுண்டி ஆகியவை ஸ்ரீரங்கம் சமிதி மகளிர் மற்றும் சேவாதளத்தொண்டர்களால் அன்புடனும் அர்ப்பணிப்புடனும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. பக்தி நிறைந்த ஆன்மிகச் சூழலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி மகா மங்கள ஆரத்தியுடன் இனிதே நிறைவுற்றது.





# இலவச பொது மருத்துவ முகாம்

திருச்சி | 09.08.2026
160 பயனாளிகள் | 7 சேவாதளத்தொண்டர்கள்

09.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று புதுக்கோட்டை முதன்மைச் சமிதி மற்றும் குழிபிறை நகரத்தார் இணைந்து குழிபிறையில் இலவச மருத்துவ முகாமைச் சிறப்பாக நடத்தினர். 6 மருத்துவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு விரிவான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 77 ஆண்கள் மற்றும் 83 பெண்கள் என மொத்தம் 160 பயனாளிகள் மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் இலவசமாகப் பெற்றனர். இம்முகாமில் 7 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு நோயாளிகளை வழிநடத்துதல் உள்ளிட்ட அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளையும் கனிவோடு மேற்கொண்டனர்.





# காயத்ரி மந்திர ஜபம்

திருச்சி | 23.08.2026 | 45 சேவாதளத்தொண்டர்கள்

23.08.2026 அன்று ஸ்ரீரங்கம் அருணா நகரில் அமைந்துள்ள காயத்ரி சன்னதியில், திருச்சி மாவட்டத்தின் அனைத்துச் சமிதிகளிலிருந்தும் பக்தர்கள் ஒன்றிணைந்து காயத்ரி மந்திரம் ஜபிக்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 20 ஆண்களும் 25 மகளிரும் கலந்துகொண்டனர்.





# புதிய பாலவிகாஸ் மையம் தொடக்கம்

திருச்சி | 04.08.2026 | 71 சேவாதளத்தொண்டர்கள்

04.08.2026 அன்று புதுக்கோட்டை முதன்மைச் சமிதி சார்பில் பூங்கா நகரில் அமைந்துள்ள ராஜப்பா தொடக்கப் பள்ளியில் புதிய பாலவிகாஸ் மையம் தொடங்கப்பட்டது. இதில் 30 மாணவர்கள் மற்றும் 41 மாணவிகள் என மொத்தம் 71 குழந்தைகள் இணைந்தனர்.



# உண்டியல் எண்ணும் சேவை

திருச்சி | 25.08.2026 | 111 சேவாதளத்தொண்டர்கள்

25.08.2026 அன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவிலில் திருச்சி மாவட்ட அனைத்துச் சமிதிகளின் சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்ற உண்டியல் காணிக்கை எண்ணும் சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச்சேவையில் 36 ஆண் சேவாதளத்தொண்டர்களும் 75 பெண் சேவாதளத்தொண்டர்களும் கலந்துகொண்டனர்.



# ஸ்ரீ பாலமுருகன் கோவிலில் சிறப்பு பஜன்

திண்டுக்கல்

06.08.2026 31 சேவாதளத்தொண்டர்கள்

06.08.2026 அன்று ஆடிக்கிருத்திகையை முன்னிட்டு கோவிந்தாபுரம் பாலமுருகன் கோவிலில் மாலை 5:35 மணி முதல் 6:25 மணி வரை சிறப்பு பஜனை பக்திபூர்வமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 9 ஆண்கள், 10 மகளிர், 10 பக்தர்கள் மற்றும் 2 குழந்தைகள் என மொத்தம் 31 நபர்கள் கலந்துகொண்டனர்.



# ஓணம் மற்றும் மிலாடி நபி முன்னிட்டு சிறப்பு நகர சங்கீர்த்தனம்

திண்டுக்கல்

26.08.2026 | 24 சேவாதளத்தொண்டர்கள்

26.08.2026 புதன்கிழமை அன்று ஓணம் மற்றும் மிலாது நபியை முன்னிட்டு திண்டுக்கல் மகாலட்சுமி நகர் சமிதியில் காலை 5:20 மணி முதல் 6:35 மணி வரை சிறப்பு நகரசங்கீர்த்தனம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 13 ஆண்கள் மற்றும் 11 மகளிர் என மொத்தம் 24 நபர்கள் கலந்துகொண்டு பகவானின் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டனர்.

# ஆடி வெள்ளி திருவிளக்கு பூஜை

திண்டுக்கல் | 07, 14.08.2026 | 367 பயனாளிகள் | 27 சேவாதளத்தொண்டர்கள்

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆடி வெள்ளியை முன்னிட்டு 07.08.2026 மற்றும் 14.08.2026 ஆகிய தேதிகளில் பல்வேறு சமிதிகள் மற்றும் மையங்களில் திருவிளக்கு பூஜைகள் பக்திபூர்வமாக நடைபெற்றன.

07.08.2026 அன்று கொடைக்கானல் சாய் சுருதியில் நடைபெற்ற பூஜையில் 130 மகளிர் மற்றும் 6 ஆண்கள் கலந்துகொண்டனர். மகாலட்சுமி நகர் சமிதி சார்பில் திருமதி மாதுரி மனோஜ் இல்லத்தில் நடைபெற்ற பூஜையில் 32 மகளிர் மற்றும் 7 ஆண்கள் பங்கேற்றனர்.

14.08.2026 கடைசி ஆடி வெள்ளியன்று மகாலட்சுமி நகர் சமிதி சார்பில் திருமதி மகேஸ்வரி இல்லத்தில் நடைபெற்ற பூஜையில் 13 மகளிர் மற்றும் 2 ஆண்கள் பங்கேற்றனர். கொடைக்கானல் சாய் சுருதியில் நடைபெற்ற பூஜையில் 130 மகளிர் மற்றும் 10 ஆண்கள் கலந்துகொண்டனர். பழனி சமிதி சார்பில் திருமதி சங்கீதா இல்லத்தில் நடைபெற்ற பூஜையில் 30 மகளிர், 2 ஆண்கள் மற்றும் 5 குழந்தைகள் கலந்துகொண்டனர். அனைத்து நிகழ்வுகளிலும் சேர்த்து

மொத்தம் 367 நபர்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# வரலக்ஷ்மி நோன்பு சிறப்பு பஜன்

திண்டுக்கல்

21.08.2026 13 சேவாதளத்தொண்டர்கள்

21.08.2026 வெள்ளிக்கிழமை வரலட்சுமி நோன்பை முன்னிட்டு திண்டுக்கல் மகாலட்சுமி நகர் சமிதியில் மாலை 6:45 மணி முதல் இரவு 8:00 மணி வரை சிறப்பு பஜனை பக்திபூர்வமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 4 ஆண்கள் மற்றும் 9 மகளிர் என மொத்தம் 13 நபர்கள் கலந்துகொண்டனர்.





# கரிஷ்யே வசன தவ

தஞ்சாவூர் | 02.08.2026 | 75 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் தஞ்சாவூர் மகர்நோன்புச்சாவடி சமிதியில் கரிஷ்யே வசனம் தவ நிகழ்ச்சி 02.08.2026 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் மொத்தம் 75 பேர் பங்கேற்றனர்.

நமது மாநில அமைப்பின் மூன்று பிரிவுகளைச் சேர்ந்த பேச்சாளர்கள் சாய் உறுப்பினர்களிடையே உரையாற்றி வழிகாட்டினர். மூன்று பிரிவுகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்கள் அமைப்பின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கினர்.





# பொது மருத்துவ முகாம் மற்றும் பல் மருத்துவ முகாம்

தஞ்சாவூர் | 07.08.2026
150 பயனாளிகள் | 7 சேவாதளத்தொண்டர்கள்

07.08.2026 அன்று கண்டனூர் கிராமத்தில் தஞ்சை மீனாட்சி மருத்துவமனை மற்றும் 8 மருத்துவர்களுடன் இணைந்து பொது மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் இருதய சிகிச்சை முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்முகாமில் 150 நோயாளிகள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு இரத்த அழுத்தம், இருதயப் பரிசோதனை, இரத்தச் சர்க்கரை அளவு, இரத்த சோகை, உடல் எடை மற்றும் பல் மருத்துவ ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, முழுப் பரிசோதனைக்குப் பின் மருந்துகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும் இயன்முறை மருத்துவச் சிகிச்சையும் பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டது. 7 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு பணிகளை ஒருங்கிணைத்தனர்.





# திருவிளக்கு பூஜை

தஞ்சாவூர் | 07.08.2026

105 பயனாளிகள் | 23 சேவாதளத்தொண்டர்கள்

07.08.2026 அன்று ஆடி நான்காவது வெள்ளிக்கிழமையை முன்னிட்டு மன்னார்குடி சமிதியில் குத்துவிளக்கு பூஜை மற்றும் லலிதா சகஸ்ரநாம பாராயணம் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் கும்பகோணம் சமிதி சார்பில் நடுவக்கரை ஸ்ரீ சத்ய சாய் முதியோர் இல்லத்தில் நடைபெற்ற குத்துவிளக்கு பூஜையில் 45 பொதுமக்களும் 8 சேவாதளத்தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

மேலும் 14.08.2026 ஆடி வெள்ளியன்று வீரமாங்குடியில் நடைபெற்ற குத்துவிளக்கு பூஜையில் 60 நபர்கள் கலந்துகொண்டு பகவானின் அருள் பெற்றனர்.





# நாராயண சேவை

தஞ்சாவூர் | 19.08.2026

160 பயனாளிகள் | 14 சேவாதளத்தொண்டர்கள்

19.08.2026 அன்று மகளிர் தினத்தை முன்னிட்டு சமிதியில் உணவு தயாரிக்கப்பட்டு, தஞ்சாவூரின் பல பகுதிகளுக்கு நேரில் சென்று நாராயண சேவை வழங்கப்பட்டது. இச்சேவையில் 14 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு 160 பயனாளிகளுக்கு உணவளித்தனர்.





# காயத்ரி மந்திர ஜபம்

தஞ்சாவூர் | 23.08.2026
41 பயனாளிகள் | 120 சேவாதளத்தொண்டர்கள்

23.08.2026 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தின் 5 சமிதிகளில் காயத்ரி மந்திர ஜபம் சிறப்பாக நடைபெற்றது. இதில் மகளிர் 35 பேர், பாலவிகாஸ் மாணவிகள் 18 பேர், பாலவிகாஸ் மாணவர்கள் 9 பேர், ஆண்கள் 29 பேர் மற்றும் பொதுமக்கள் 12 பேர் பங்கேற்றனர்.

இதன் ஒரு பகுதியாகக் கும்பகோணம் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியில் காலை 8:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை காயத்ரி ஜபம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாலவிகாஸ் மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், குருமார்கள் மற்றும் சாய் அன்பர்கள் கலந்துகொண்டனர்.

# முதியோர் இல்ல சேவை

தஞ்சாவூர் | 27.08.2026

30 பயனாளிகள் | 2 சேவாதளத்தொண்டர்கள்

27.08.2026 அன்று தஞ்சாவூர் மகர்நோன்புச்சாவடி சமிதி சார்பாக வலங்கைமானில் உள்ள முதியோர் இல்லத்தில் வசிக்கும் 30 முதியவர்களுக்கு அருட்பிரசாதம் அன்புடன் வழங்கப்பட்டது.

## மனநலம் குன்றியோர் இல்லத்தில் நாராயண சேவை

தஞ்சாவூர் 02.08.2026
40 பயனாளிகள் 3 சேவாதளத்தொண்டர்கள்

02.08.2026 அன்று மன்னார்குடி சமிதி சார்பில் லட்சுமங்குடி நகரில் உள்ள சிறப்புப் பள்ளியில் மனவளர்ச்சி குன்றிய 40 அன்பர்களுக்குக் காலை உணவு நாராயண சேவையாக வழங்கப்பட்டது.

# பாலவிகாஸ் குரூப் 2 & 3 தேர்வுகள்

தஞ்சாவூர் | 31.08.2026 | 40 பயனாளிகள்

31.08.2026 அன்று பாலவிகாஸ் குரூப் 2 மற்றும் 3 தேர்வுகள் நடைபெற்றன. இதில் கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் சமிதிகளைச் சேர்ந்த 11 குரூப் 2 மாணவர்களும், 8 குரூப் 3 மாணவர்களும் தேர்வு எழுதினர்.

அதே நாளில் தஞ்சாவூர் பதிவாளர் காலனி சமிதி மற்றும் மகர்நோன்புச்சாவடி சமிதிகளைச் சேர்ந்த 5 குரூப் 2 மாணவர்களும், 6 குரூப் 3 மாணவர்களும் தேர்வு எழுதினர். வருகை தந்த அனைத்து மாணவர்களுக்கும் சேவாதளத்தொண்டர்களுக்கும் சுவாமியின் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.





# ஸ்ரீ சத்ய சாயி ப்ரேம தரு நிகழ்ச்சி

**கோயம்புத்தூர்** **02.08.2026**

கோயம்புத்தூர் மாவட்டம் ஸ்ரீராம் நகர் சமிதி சார்பில் 02.08.2026 அன்று கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான அம்மா பூங்காவில் ஸ்ரீ சத்ய சாய் பிரேம தரு திட்டத்தின் கீழ் 100 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்டத் தலைவர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பூங்காவில் பலா, கொய்யா, நெல்லி உள்ளிட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் சமிதிப் பொறுப்பாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர். பங்கேற்ற அனைவருக்கும் சுவாமியின் திருவுருவப் படம் பிரசாதமாக வழங்கப்பட்டது.

# பள்ளி மாணவியர்களுக்கான கண் சிகிச்சை முகாம்

கோயம்புத்தூர் | 07.08.2026 | 548 பயனாளிகள்

பொள்ளாச்சி ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து 07.08.2026 அன்று பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கான கண் பரிசோதனை முகாமை நடத்தின.

இம்முகாமில் 548 மாணவிகள் கண் பரிசோதனை செய்துகொண்டனர். அவர்களில் 38 மாணவிகளுக்குக் கண் கண்ணாடிகள் பரிந்துரைக்கப்பட்டன. மேலும் 10 மாணவிகள் மேல்சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.

# ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக வைபவம்

கோயம்புத்தூர் | 08.08.2026 | 75 பயனாளிகள்

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் 08.08.2026 அன்று ஸ்ரீராமர் பட்டாபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பத்து நாள்கள் நடைபெற்ற சுந்தரகாண்ட பாராயணத்தின் நிறைவு விழாவாகும். இதில் 45 மகளிர் மற்றும் 30 ஆண்கள் என மொத்தம் 75 பக்தர்கள் கலந்துகொண்டு ஆன்மிகப் பேரானந்தம் அடைந்தனர்.

# மகா நாராயண சேவை

கோயம்புத்தூர் | 09.08.2026 | 44 பயனாளிகள்

09.08.2026 அன்று கோயம்புத்தூர் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் மகா நாராயண சேவை சிறப்பாக நடைபெற்றது. 300 நபர்களுக்குத் தேவையான உணவுப் பிரசாதம் தயாரிக்கப்பட்டு நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இச்சேவைப் பணியில் 28 ஆண் சேவாதளத்தொண்டர்களும் 16 பெண் சேவாதளத்தொண்டர்களும் கலந்துகொண்டு உணவு தயாரித்தல் மற்றும் விநியோகிக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

# கரிஷ்யே வசனம் தவ - சாதனா முகாம்

**கோயம்புத்தூர்** **09.08.2026**

09.08.2026 அன்று கோயம்புத்தூர் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் கரிஷ்யே வசனம் தவ வேர்களை நோக்கி சாதனா முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 8:00 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் நிகழ்வு தொடங்கியது.

மாநில மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டு பகவானின் வழிகாட்டுதல்களை வாழ்வில் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். கல்வி, ஆன்மிகம் மற்றும் சேவை ஆகிய மூன்று பிரிவுகளின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

பிரிவுப் பொறுப்பாளர்கள் தங்களின் அனுபவங்களையும் செயல்திட்டங்களையும் பகிர்ந்துகொண்டனர். நிகழ்வின் இறுதியில் முக்கிய அம்சங்களின் தொகுப்புரை வழங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் பகவானின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்டன.

# ஆடி மாத வெள்ளிக்கிழமை பூஜை

**கோயம்புத்தூர்** **14.08.2026**

14.08.2026 ஆடி ஐந்தாவது வெள்ளிக்கிழமையன்று சாயிபாபா காலனி சமிதி சார்பில் குப்பநாயக்கன்பாளையம் அருள்மிகு ஸ்ரீ சத்திய காளியம்மன் கோவிலில் சிறப்பு அபிஷேகம், அலங்காரம், லலிதா சகஸ்ரநாம பாராயணம், பஜனை மற்றும் தீபாராதனை நடைபெற்றன.

இக்கோவிலில் உள்ள அம்பாளின் திருவுருவச் சிலையை நமது அன்பிற்குரிய சுவாமி 08.05.1989 அன்று தமது திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

# ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம்

கோயம்புத்தூர் | 15.08.2026 | 58 பயனாளிகள்

15.08.2026 அன்று குனியமுத்தூர் சமிதி சார்பில் ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம் பக்திபூர்வமாக நடைபெற்றது. இதில் 23 ஆண்கள் மற்றும் 35 மகளிர் என மொத்தம் 58 பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமியின் அருள் பெற்றனர்.

# திறன் மேம்பாட்டு மையம்

கோயம்புத்தூர் | 16.08.2026 | 27 பயனாளிகள்

16.08.2026 அன்று கோட்டூர் மலையாண்டிபட்டினத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ சத்ய சாய் திறன் மேம்பாட்டு மையத்தில் டேலி கணினிப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டன.

இப்பயிற்சியில் 27 மாணவர்கள் பதிவு செய்து கலந்துகொண்டனர். இவர்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# ஹிருதய சங்கமம்

கோயம்புத்தூர் | 15.08.2026 | 100 பயனாளிகள் | 51 சேவாதளத்தொண்டர்கள்

15.08.2026 அன்று கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் புட்டபர்த்தி மற்றும் ஒயிட்பீல்டு உயர் சிறப்பு மருத்துவமனைகளில் இருதய சிகிச்சை பெற்ற பயனாளிகளுக்கான ஹிருதய சங்கமம் மருத்துவ மறுஆய்வு முகாம் சிறப்பாக நடைபெற்றது.

காலை 7:00 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் தொடங்கிய நிகழ்வில் வேதம், சாய் பஜனை மற்றும் மாவட்டத் தலைவரின் வரவேற்புரை ஆகியவை இடம்பெற்றன. மருத்துவர்கள் ஆர். ரமணி, டி. ரவிகுமார், கே.எஸ். கணேசன், கோவிந்தராஜுலு ஆகியோர் கலந்துகொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர். நடமாடும் மருத்துவமனை மூலம் ஈ.சி.ஜி. மற்றும் இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தன்வந்திரி திட்டத்தின் மூலம் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இம்முகாமில் 31 ஆண்கள் மற்றும் 20 பெண்கள் என மொத்தம் 51 பயனாளிகள் பயனடைந்தனர். சேவாதளத்தொண்டர்கள் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் அனைவருக்கும் காலை

சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டு மங்கள ஆரத்தியுடன் நிறைவுற்றது.

# 108 இல்லங்களில் சாய் பஜனை

கோயம்புத்தூர் | 01.08.2026 | 75 பயனாளிகள்

சுவாமியின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டுக் கோவைப்புதூர் சமிதி சார்பில் 108 இல்லங்களில் சாய் பஜனை நடத்தப்பட்டு ஜூலை மாதம் நிறைவடைந்தது. இதில் பக்தர்களின் இல்லங்கள், புதியவர்களின் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் பஜனைகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

இதன் நிறைவு நிகழ்வாக சுவாமிக்கு நன்றி தெரிவிக்கும் சிறப்பு பஜனை 01.08.2026 அன்று சமிதி வளாகத்தில் நடைபெற்றது. இதில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பக்தர்கள் என 75-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு சுவாமியின் அருள் பெற்றனர்.

# ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம்

கோயம்புத்தூர் | 16.08.2026 | 65 பயனாளிகள்

16.08.2026 அன்று கோவை மாவட்டத்திலுள்ள அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை சங்கமேஸ்வரர் திருக்கோவிலில் ஸ்ரீ சத்ய சாய் வேதக் குழுவினர் ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்தனர். இதில் 30 ஆண்கள் மற்றும் 35 மகளிர் என 65 பக்தர்கள் கலந்துகொண்டனர். திருக்கோவில் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களும் இதில் பங்கேற்றனர்.

## சத்சங்கம்

கோயம்புத்தூர் | 22.08.2026 | 16 பயனாளிகள்

22.08.2026 அன்று குனியமுத்தூர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில் சிறப்பு ஆன்மிகச் சொற்பொழிவு சத்சங்கம் நடைபெற்றது. இதில் மாவட்ட மகளிர் இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் செல்வி காயத்ரி சங்கர் அவர்கள் ஆன்மிகச் சிந்தனைகளையும் பகவானின் போதனைகளையும் பகிர்ந்துகொண்டார். இந்நிகழ்ச்சியில் 10 ஆண்கள் மற்றும் 6 மகளிர் என மொத்தம் 16 பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# காயத்ரி மந்திர ஜபம்

கோயம்புத்தூர் | 23.08.2026 | 100 பயனாளிகள்

மாநில வழிகாட்டுதலின்படி 23.08.2026 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தின் பல்வேறு சமிதிகளில் ஒரு மணி நேரக் காயத்ரி மந்திர ஜபம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு காயத்ரி மந்திரத்தை ஜபித்தனர்.



# மகா நாராயண சேவை

கோயம்புத்தூர் | 23.08.2026 | 220 பயனாளிகள்

23.08.2026 அன்று கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் மாதாந்திர மகா நாராயண சேவை சிறப்பாக நடைபெற்றது. இதில் தயாரிக்கப்பட்ட உணவுப் பிரசாதம் தத்துக் கிராமங்களான குப்பனூர் மற்றும் செல்லப்பகவுண்டன்புதூர் கிராமங்களில் மருத்துவ முகாமுடன் இணைந்து 220 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இச்சேவையில் 13 ஆண் சேவாதளத்தொண்டர்களும் 8 பெண் சேவாதளத்தொண்டர்களும் கலந்துகொண்டு சேவையாற்றினர்.

# ஸ்ரீ சத்ய சாயி பாலவிகாஸ் மதிப்பீடு 2026

கோயம்புத்தூர் | 30.08.2026 | 100 பயனாளிகள்

30.08.2026 அன்று கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் மாநில வழிகாட்டுதலின்படி பாலவிகாஸ் மதிப்பீடு தேர்வு சிறப்பாக நடைபெற்றது. இதில் குரூப் 2 பிரிவில் 15 மாணவர்களும், குரூப் 3 பிரிவில் 38 மாணவர்களும் என மொத்தம் 53 மாணவர்கள் தேர்வு எழுதினர்.

மாவட்டத் தலைவர் பெற்றோர்களிடம் உரையாற்றிப் பாலவிகாஸின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மாணவர்கள் காலை 10:30 மணி முதல் நண்பகல் 12:30 மணி வரை அமைதியான சூழலில் தேர்வை நிறைவு செய்தனர். தொடர்ந்து பெற்றோர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்று மங்கள ஆரத்தியுடன் விழா நிறைவுற்றது. இதில் பாலவிகாஸ் குருமார்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் என 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# பள்ளியில் பஜனை

காஞ்சிபுரம் வடக்கு | 02.08.2026 | 7 பயனாளிகள் | 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் சிட்லபாக்கம் சமிதி அன்பர்கள் சார்பில், குரோம்பேட்டையில் உள்ள எஸ்.சி.எஸ். பள்ளியில் பஜனை நடைபெற்றது. சமிதி அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு பகவானின் அருளாசிகளைப் பெற்றனர்.





# மிலாது-உன்-நபி & ஓணம் திருநாள் கொண்டாட்டம்

காஞ்சிபுரம் வடக்கு | 26.08.2026 | 15 பயனாளிகள் | 32 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் தெய்வீக அருளாசியுடன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் பல்வேறு சமிதிகளில் மிலாது-உன்-நபி மற்றும் ஓணம் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நன்னாளை முன்னிட்டு சமிதிகளில் சிறப்பு பஜனைகள் பக்தியுடனும் பேரானந்தத்துடனும் நடைபெற்றன.

இக்கொண்டாட்டம், நம் அன்பிற்கினிய சுவாமி அருளிய ஒரே மதம் அன்பின் மதம் என்ற உயரிய செய்தியை நம் உள்ளங்களில் மீண்டும் நினைவூட்டியது. மதங்கள் வேறுபட்டாலும் அவை அனைத்தும் மனிதனை அன்பு, சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் இறைநேயம் நோக்கி வழிநடத்துகின்றன என்ற உண்மையை இந்நிகழ்வு எடுத்துரைத்தது.

சமிதிகளின் மகளிர், ஆடவர், இளைஞர் மகளிர், இளைஞர் ஆடவர் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஆர்வத்துடனும் பக்தியுடனும் சிறப்பு பஜனையில் பங்கேற்று, இறைநாம சங்கீர்த்தனையின் மூலம் ஆன்மிக அதிர்வை ஏற்படுத்தினர்.

பக்தி நிறைந்த பஜனை மகா மங்கள ஆரத்தியுடன் நிறைவு பெற்றது. தொடர்ந்து அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டு, அன்பும் ஒற்றுமையும் நிறைந்த இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது. அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய் என்ற சுவாமியின் தெய்வீகச் செய்தியை வாழ்வில் கடைப்பிடிப்போம், அனைத்து மதங்களிலும் உறையும் ஒரே இறை உணர்வை அனுபவிப்போம்.



# கரிஷ்யே வசனம் தவ

காஞ்சிபுரம் வடக்கு | 09.08.2026 | 155 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் அருளால், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் நடைபெற்ற கரிஷ்யே வசனம் தவ சாதனா முகாம் ஆன்மிக எழுச்சியுடன் சிறப்பாக நிறைவேறியது. வேத பாராயணம், அன்பின் தீபம், பஜனை ஆகியவற்றுடன் தொடங்கிய இந்நிகழ்வில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், 22 சமிதிகள் மற்றும் 2 பஜனை மண்டலிகள் பங்கேற்றனர்.

மாவட்டத் தலைவர் வேர்களை நோக்கி மற்றும் கரிஷ்யே வசனம் தவ என்ற தெய்வீக அழைப்பின் நோக்கத்தை விளக்கினார். கல்வி, ஆன்மிகம், சேவை, இளைஞர் உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளும் கடந்த ஆண்டின் செயல்பாடுகளையும் அடுத்த ஆறு மாதங்களுக்கான திட்டங்களையும் பகிர்ந்தன. காஞ்சிபுரம் வடக்கு தொலைநோக்கு 2030 அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஆன்மிக வளர்ச்சியை நோக்கி முன்னேற வேண்டிய திசை விளக்கப்பட்டது.

பஜனை, வேதம், சனாதன சாரதி, மகளிர் ஆன்மிகம், எஸ்.எஸ்.எஸ்.வி.ஐ.பி, பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட பிரிவுகள் தங்களது முயற்சிகளையும் எதிர்காலத் திட்டங்களையும் வழங்கின. சுவாமி, தங்களது திருவுளமே

எங்கள் சங்கல்பம் என்ற சரணாகதி உணர்வுடன் நிகழ்வு மகா மங்கள ஆரத்தியுடன் நிறைவு பெற்றது.






# நாராயண சேவை

காஞ்சிபுரம் வடக்கு | 23.08.2026 | 102 பயனாளிகள் | 10 சேவாதளத்தொண்டர்கள்

கலியுகத் தெய்வம் சத்ய சாயி பகவானின் பேராசியுடன் 23.08.2026 அன்று நம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாடம்பாக்கம் சமிதியில் எளியோர்க்கு நாராயண சேவை வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. சுமார் 30 சாயி உறுப்பினர்களின் இல்லங்களிலிருந்து வீட்டிற்கு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் காலை 10:30 மணிக்குள் சமிதிக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

அங்கு அவை பிரம்மார்ப்பணம் செய்யப்பட்டு 7 சேவாதளத்தொண்டர்கள் மூலம் 102 உணவுப் பொட்டலங்கள், மாடம்பாக்கத்தைச் சுற்றி வசிக்கும் ஏழை எளியோருக்கு விநியோகம் செய்யப்பட்டன. நாராயண சேவை என்பது மனிதர்களுக்குச் செய்யும் சேவை அல்ல, அது நேரடியாக இறைவனைச் சென்றடையும் பக்திப் பணியாகும் என்று உணர்ந்து, இந்த வாய்ப்பளித்த பகவானுக்கு நன்றி கூறி அனைவரும் விடைபெற்றனர்.



# ஏகாதச ருத்ர பாராயணம்

காஞ்சிபுரம் வடக்கு | 15.08.2026 | 97 பயனாளிகள் | 15 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் அளவற்ற அருளால், கிண்டி ஷீர்டி பாபா கோவிலில் ஏகாதச ருத்ர பாராயணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நமது மாவட்டத்திலிருந்து 25-க்கும் மேற்பட்ட மகளிர் மற்றும் 35-க்கும் மேற்பட்ட ஆண்கள் கலந்துகொண்டனர். மொத்தத்தில் 95-க்கும் மேற்பட்ட அன்பர்கள் இந்தப் புனித சாதனையில் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.

இந்த தெய்வீக சாதனையின் மூலம் அருளைப் பொழிந்த சுவாமிக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகள். அன்பும் பக்தியும் நிரம்பிய மனதுடன் மகா மங்கள ஆரத்தியுடனும் பிரசாதத்துடனும் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.





# ஹோசூர் சமிதியில் பஜன்

காஞ்சிபுரம் வடக்கு | 15.08.2026 | 25 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் திவ்ய அருளால், ஓசூர் சமிதி ஏற்பாடு செய்த 101 மணி நேர அகண்ட பஜனை சாதனையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் அன்புடனும் பக்தியுடனும் பங்கேற்றது. இச்சிறப்பான ஆன்மிக சாதனையில் மாவட்டத் தலைவர், மாவட்ட பஜனை ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர், ஆண்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு, தங்களது பக்தியை சுவாமியின் திருவடிகளில் சமர்ப்பித்தனர்.

மாவட்ட பஜனை அணியினரும், இசைக்கருவிகளை இசைக்கும் பக்தர்களும் இணைந்து பஜனையில் பங்கேற்று, நாம சங்கீர்த்தனத்தின் மூலம் நிகழ்விற்கு மேலும் ஆன்மிக அதிர்வையும் பக்தி உணர்வையும் ஏற்படுத்தினர். சுவாமியின் மீது கொண்ட பேரன்புடன், ஒவ்வொருவரும் தங்களது பஜனையை ஒரு பிரார்த்தனையாகவும் சாதனையாகவும் சுவாமியின் திருவடிகளில் அர்ப்பணித்தனர். நாம சங்கீர்த்தனத்தில் ஒன்றிணைந்த அந்த நேரங்கள் பக்தர்களின் உள்ளங்களில் அன்பையும் ஆனந்தத்தையும் நிறைத்தன.

இச்சாதனையில் பங்கேற்ற அனைவருக்கும் இது ஒரு பஜனை நிகழ்வாக மட்டுமல்லாமல், சுவாமியின் அருளில் ஒன்றிணைந்த ஓர் ஆன்மிக சாய் குடும்பச் சங்கமமாக

அமைந்தது. வயது, பிரிவு, பொறுப்பு என அனைத்தையும் கடந்து, ஒரே குடும்பமாக சுவாமியின் நாமத்தைப் பாடி பக்தியையும் ஆனந்தத்தையும் பகிர்ந்துகொண்டனர்.

நாம சங்கீர்த்தனமே நம் சாதனை, சுவாமியின் திருநாமமே நம் பலம், அன்புடன் அர்ப்பணிப்பதே நம் பாக்கியம் என்று உணர்ந்து, பகவானின் திருவருளுக்கு நன்றியைச் சமர்ப்பித்து, இப்புனித சாதனையில் பங்கேற்ற அனைவரும் நிறைமனதுடன் திரும்பினர்.





# இலவசக் கண் மருத்துவ முகாம்

## காஞ்சிபுரம் தெற்கு

30.08.2026 அன்று செங்கல்பட்டு சமிதி வளாகத்தில் பம்மல் சங்கரா கண் மருத்துவமனையுடன் இணைந்து இலவசக் கண் மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமில் 24 பயனாளிகள் பரிசோதனை செய்துகொண்டதில் 17 நபர்கள் கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தேர்வு செய்யப்பட்டனர். 5 சேவாதளத்தொண்டர்கள் பணிகளை ஒருங்கிணைத்தனர். முகாமிற்கு வருகை தந்த 56 நபர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது.





# இணையவழி சாயி இலக்கிய பாராயணம்

## காஞ்சிபுரம் தெற்கு

தாம்பரம் சமிதி உறுப்பினர்கள் நாள்தோறும் இரவு 8:00 மணியளவில் இணையவழி வாயிலாகச் சாய் இலக்கியங்களைப் பாராயணம் செய்து வருகின்றனர். சந்திப்பின் நிறைவில் உலக அமைதிக்காகச் சாய் காயத்ரி மந்திர ஜபம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் தினசரி 15 உறுப்பினர்கள் தவறாமல் கலந்துகொள்கின்றனர்.

# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

## காஞ்சிபுரம் தெற்கு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம் திட்டத்தின் கீழ் இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் வேத பாராயணம் மற்றும் பஜனைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன.

தாம்பரம் சமிதி சார்பில் சனிக்கிழமைகளில் உறுப்பினர்கள் இல்லங்களில் ஸ்ரீ ருத்ர பாராயணமும் பஜனையும் நடைபெற்று வருகின்றன. இதுவரை 157 இடங்களில் இந்நிகழ்வுகள் நடத்தப்பட்டு சுமார் 100 அன்பர்கள் பங்கேற்றுள்ளனர். மேலும் 22.08.2026 அன்று பெருங்களத்தூர் சமிதி சார்பில் உறுப்பினர் இல்லத்தில் சிறப்பு பஜனை நடைபெற்றது.





# சாயி புரதச்சத்து மாவு வழங்கும் சேவை

## காஞ்சிபுரம் தெற்கு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் இணைந்து மக்களின் உடல்நலனை மேம்படுத்த சாய் புரதச்சத்து மாவு விநியோகச் சேவையை நடத்தி வருகின்றன.

தாம்பரம் சமிதி சார்பில் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் 125 கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குச் சாய் புரதச்சத்து மாவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீபெரும்புதூர் சமிதி சார்பில் தயானந்த சரஸ்வதி கிருபா இல்லத்திற்கு 30 கிலோ மாவு வழங்கப்பட்டது. பார்வதி நகர் சமிதி சார்பில் மகளிர் தயாரித்த புரதச்சத்து மாவு சிரப்பணஞ்சேரி கிராமத்தில் 25 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

# சிறப்பு நாராயண சேவை

## காஞ்சிபுரம் தெற்கு

02.08.2026 அன்று கூடுவாஞ்சேரி சமிதி மற்றும் காயரம்பேடு பஜனை மண்டலி இணைந்து 186 நபர்களுக்கு நாராயண சேவை வழங்கின. சாய் அன்பர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் ஒன்றிணைந்து உணவு தயாரித்து அன்புடன் வழங்கினர்.



# திருவிளக்கு பூஜை

## காஞ்சிபுரம் தெற்கு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகளில் ஆடி மாதத்தின் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் திருவிளக்கு பூஜைகள் சிறப்பாக நடைபெற்றன. இதில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் மாணவிகள் மற்றும் பெற்றோர் திரளாகப் பங்கேற்று சுவாமியின் அருளைப் பெற்றனர்.





# 101 பஜனை நிகழ்ச்சி

## காஞ்சிபுரம் தெற்கு

பகவானின் 101-வது பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகளில் 101 சிறப்பு பஜனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டு சுவாமியின் அருளைப் பெற்றனர்.





# காயத்ரி மந்திர ஜபம்

## காஞ்சிபுரம் தெற்கு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகளில் காயத்ரி மந்திர ஜப சாதனை பக்திபூர்வமாக மேற்கொள்ளப்பட்டது. இதில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.





# 30-ஆவது ஆண்டு விழா

## காஞ்சிபுரம் தெற்கு

பார்வதி நகர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியின் 30-வது ஆண்டு விழாவை முன்னிட்டு பல்வேறு ஆன்மிக மற்றும் சேவை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. காலையில் ஓம்காரம், சுப்ரபாதம், நகரசங்கீர்த்தனம், பிரசாந்திக் கொடியேற்றம் மற்றும் ஏகாதச ருத்ர பாராயணம் நடைபெற்றன.

மாலையில் வேத பாராயணம், சகஸ்ரநாம அர்ச்சனை, சிறப்பு பஜனை மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் ராமானுஜர் முதியோர் இல்லத்தில் பஜனையும், சங்கரா முதியோர் பராமரிப்பு மையத்தில் நாராயண சேவையும் நடத்தப்பட்டு, மங்கள ஆரத்தியுடன் நிறைவுற்றது.





# கர்ணீஸ்வரர் கோவிலில் ருத்ர பாராயணம்

## காஞ்சிபுரம் தெற்கு

பிரதோஷத்தை முன்னிட்டு சுவாமியின் திருவருளால் கர்ணீஸ்வரர் திருக்கோவிலில் ஸ்ரீ ருத்ர பாராயணம் பக்திபூர்வமாக நடைபெற்றது.





# ஆடி கிருத்திகை அன்னதான சேவை

## காஞ்சிபுரம் தெற்கு

பார்வதி நகர் சமிதி சார்பில் வல்லக்கோட்டை முருகன் கோவில் ஆடிக்கிருத்திகை அன்னதான சேவையில் 28 பெண் சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டனர். உணவு தயாரித்தல், பக்தர்களுக்கு உணவளித்தல் மற்றும் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளில் தங்களை அர்ப்பணித்துச் சிறப்பாகச் சேவையாற்றினர்.






# கிராம சேவை

## காஞ்சிபுரம் தெற்கு

பார்வதி நகர் சமிதியின் 30-வது ஆண்டு விழாவை முன்னிட்டுச் சிறப்பு கிராமச் சேவை நடைபெற்றது. இதில் தத்தெடுக்கப்பட்ட சிரப்பணஞ்சேரி மற்றும் காட்டூர் கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு அமிர்தகலசம், வஸ்திரதானம் மற்றும் நாராயண சேவை அன்புடன் வழங்கப்பட்டு மங்கள ஆரத்தியுடன் நிறைவுற்றது.





# ஏகாதச ருத்ர பாராயணம் & பஜனை

## காஞ்சிபுரம் தெற்கு

பார்வதி நகர் சமிதியில் பகவானின் திருவருளால் ஏகாதச ருத்ர பாராயணமும் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றன.

ஸ்ரீ சாய் மரகதநாதருக்குச் சிறப்பு அபிஷேகமும் ஹோமமும் செய்யப்பட்டு, சிவ அஷ்டோத்திரம் மற்றும் பஜனைகளுடன் வழிபாடு நடைபெற்றது. நிறைவாக மங்கள ஆரத்தி காண்பிக்கப்பட்டு அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.



# நடமாடும்பொது மற்றும் கண் மருத்துவ முகாம்

## காஞ்சிபுரம் தெற்கு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு இடங்களில் நடமாடும் மருத்துவ முகாம்கள் சிறப்பாக நடைபெற்றன.

16.08.2026 அன்று தாம்பரம் சமிதியின் தத்துக் கிராமமான ஆரம்பாக்கம் சாய் தோட்டத்தில் நடைபெற்ற முகாமில் 79 பயனாளிகள் கலந்துகொண்டனர். மருத்துவர்கள் பரிசோதனை செய்து ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்துகளை இலவசமாக வழங்கினர். 102 ஆய்வகப் பரிசோதனைகளும், 29 பேருக்குக் கண் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதில் கண்புரையால் பாதிக்கப்பட்ட 6 நபர்கள் பம்மல் சங்கரா கண் மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். 50 நபர்களுக்குச் சாய் புரதச்சத்து மாவு வழங்கப்பட்டது. இம்முகாமில் 35 சேவாதளத்தொண்டர்கள் சேவையாற்றினர்.

23.08.2026 அன்று மண்ணிவாக்கம் சமிதி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 159 பயனாளிகள் கலந்துகொண்டனர். 88 நபர்களுக்கு ஆய்வகப் பரிசோதனைகளும், 21 நபர்களுக்குக் கண் பரிசோதனைகளும் செய்யப்பட்டன.

இதில் 4 நபர்கள் கண்புரை அறுவை சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டனர். 50 நபர்களுக்குப் புரதச்சத்து மாவு வழங்கப்பட்டது. இம்முகாமில் 41 சேவாதளத்தொண்டர்கள் சேவையாற்றினர். இரு முகாம்களிலும் வருகை தந்த அனைவருக்கும் காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு நாராயண சேவையாக வழங்கப்பட்டன.





# ஓணம் பண்டிகை விழா

கரூர் 26.08.2026

26.08.2026 அன்று கரூர் வெங்கமேடு ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியில் ஓணம் பண்டிகை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் மகளிர் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

விழாவை முன்னிட்டு அழகிய அத்தப்பூக்கோலம், பாலவிகாஸ் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி, சாய் பஜனைகள் மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகள் மகிழ்ச்சியும் பக்தியும் நிறைந்த சூழலில் நடைபெற்றன.





# பஜனை மற்றும் நாராயண சேவை

கரூர் 23.08.2026

23.08.2026 அன்று கரூர் சணப்பிரட்டி கிராமத்தில் உள்ள சக்தி மனநலப் பயிற்சி இல்லத்தில் 12-வது நாள் சேவையாகப் பஜனை மற்றும் நாராயண சேவை நடைபெற்றது.

சாய் பக்தர்கள் மற்றும் சேவாதளத்தொண்டர்கள் இணைந்து பஜனை பாடியதுடன், அங்குள்ள பயனாளிகளுக்கு அன்புடன் அன்னதானம் வழங்கினர்.





# 108 முறை சாய் காயத்ரி மந்திர ஜபம்

கரூர் 25.08.2026

25.08.2026 அன்று கரூர் வெங்கமேடு ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியில் நகரசங்கீர்த்தனம் மற்றும் சிறப்பு ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் 108 முறை சாய் காயத்ரி மந்திர ஜபம் மற்றும் உலக அமைதிக்கான லோக சேமப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டு மங்கள ஆரத்தியுடன் நிறைவுற்றது.





# ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்பு

கரூர் 23.08.2026

23.08.2026 அன்று கரூர் வெங்கமேடு ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியில் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்பின் முதல் நாள் பயிற்சி நடைபெற்றது.

திருமதி கிருஷ்ணவேணி அவர்கள் பயிற்சியை வழிநடத்தி, ஆங்கிலத்தில் எளிமையாகவும் தன்னம்பிக்கையுடனும் உரையாடுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.



# கோவில் உழவாரப்பணி

கரூர் 16.08.2026

16.08.2026 அன்று கரூர் ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்பினரால் கோவில் உழவாரப்பணி, நாராயண சேவை மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

கோவில் வளாகம் தூய்மைப்படுத்தப்பட்டு உழவாரப்பணி மேற்கொள்ளப்பட்டதுடன், அன்னதானமும் வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு உற்சாகமூட்டப்பட்டது. இந்நிகழ்வுகளில் சேவாதளத்தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினர்.





# இல்ல பஜனை மற்றும் வரலட்சுமி விரதம்

கரூர் 22.08.2026

22.08.2026 அன்று வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு இல்லப் பஜனை பக்திபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பகவானின் திவ்யச் செய்தி வாசித்தல், ஆன்மிக அனுபவப் பகிர்வு மற்றும் சாய் பஜனைகள் நடைபெற்று மங்கள ஆரத்தியுடன் இனிதே நிறைவு பெற்றது.





# திருவிளக்கு பூஜை

ஈரோடு | 28.08.2026 | 18 பயனாளிகள்

28.08.2026 அன்று ஈரோடு சித்தோடு சமிதியில் திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது. இதில் 4 பாலவிகாஸ் குருமார்கள், 4 பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் 10 பெரியவர்கள் என மொத்தம் 18 பேர் கலந்துகொண்டனர். நிறைவில் அனைவருக்கும் சுவாமியின் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.





# பிரேம ரதம் - ஈரோடு

ஈரோடு 31.07.2026 to 25.08.2026

ஈரோடு மாவட்டத்தில் 31.07.2026 முதல் 25.08.2026 வரை சுவாமியின் பிரேம ரத பவனி அனைத்து சமிதிகள் மற்றும் கிராமங்களில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கோபிசெட்டிபாளையம், கவுண்டன்புதூர், நஞ்சங்கவுண்டம்பாளையம், சித்தோடு, பாலாஜி கார்டன், மூலப்பாளையம், காந்திநகர், திருநகர் காலனி, ஈரோடு கிழக்கு, சூளை, அந்தியூர், பழனிபுரம், பவானி, அரசூர்புதூர், சத்தியமங்கலம் மற்றும் புளியம்பட்டி ஆகிய பகுதிகளில் ரதத்திற்குப் பூரண கும்ப மரியாதை, சீர்வரிசைகள், கோலாட்டம் மற்றும் கும்மியாட்டத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பல்வேறு இடங்களில் பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், பஜனைகள் மற்றும் நாராயண சேவைகள் சிறப்பாக நடத்தப்பட்டு, இறுதியில் புளியம்பட்டியிலிருந்து ரதம் திருப்பூர் மாவட்டத்திற்கு வழி அனுப்பி வைக்கப்பட்டது.


ஸ்ரீ விநாயகா ஆப்டிகல்ஸ்


SRI SATHYA SAI TRUST TAMILNADU

# வரலஷ்மி பூஜை

ஈரோடு | 21.08.2026 | 24 சேவாதளத்தொண்டர்கள்

21.08.2026 வெள்ளிக்கிழமை அன்று வரலட்சுமி பூஜை ஈரோடு மாவட்டம் கவுண்டன்புதூர் சமிதியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 10:15 மணிக்குத் தொடங்கி நண்பகல் 1:00 மணிக்கு நிறைவு பெற்ற இப்பூஜையில் 24 மகளிர் கலந்துகொண்டு சுவாமியின் ஆசிகளைப் பெற்றனர்.





# காயத்ரி மந்திர ஜபம்

ஈரோடு | 23.08.2026 | 75 சேவாதளத்தொண்டர்கள்

23.08.2026 அன்று ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்துச் சமிதிகளிலும் 108 முறை காயத்ரி மந்திர ஜபம் சுவாமியின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டது.

சித்தோடு, பவானி, ஈரோடு கிழக்கு, மூலப்பாளையம், பழனிபுரம், பாலாஜி கார்டன், கவுண்டன்புதூர், சூளை, முத்துக்காளிமடை, காந்திநகர் உள்ளிட்ட சமிதிகளில் அன்பர்கள் ஒன்றுகூடி காயத்ரி மந்திரத்தை ஜபித்தனர். இம்மாவட்டம் முழுவதும் சுமார் 75 அன்பர்கள் கலந்துகொண்டு உலக நன்மைக்காகப் பிரார்த்தனை செய்தனர்.





# ஓணம் பண்டிகை

ஈரோடு | 25.08.2026 | 50 சேவாதளத்தொண்டர்கள்

25.08.2026 அன்று ஈரோடு மாவட்டம் தெற்குப்பள்ளம் சமிதியில் ஓணம் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாலையில் திரு. செந்தில் மற்றும் திருமதி வித்யா செந்தில் இல்லத்தில் சிறப்பு பஜனை நடைபெற்றது.

இதில் சித்தோடு, காந்திநகர், மூலப்பாளையம் மற்றும் தெற்குப்பள்ளம் சமிதிகளின் அன்பர்கள் கலந்துகொண்டனர். மூத்த அன்பர்கள் தங்களது ஆன்மிக அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். மங்கள ஆரத்திக்குப் பின்னர் அனைவருக்கும் அன்னப்பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் 50 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





# இலவச சிகிச்சை முகாம்

ஈரோடு | 30.08.2026

115 பயனாளிகள் | 25 சேவாதளத்தொண்டர்கள்

30.08.2026 அன்று ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மலைப்பகுதியிலுள்ள ஓசாட்டி, மாவெல்லம், கோட்டாடை, குலியாடா உள்ளிட்ட 10 கிராமங்களில் பி.எஸ்.ஜி. மருத்துவமனை மருத்துவர் குழுவினரைக் கொண்டு இலவச மருத்துவ முகாம் காலை 10:00 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை நடைபெற்றது.

இம்முகாமில் 115 கிராம மக்கள் பயனடைந்தனர். முகாம் பணிகளை 25 சேவாதளத்தொண்டர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்து மேற்கொண்டனர்.






# கண் சிகிச்சை முகாம்

ஈரோடு | 30.08.2026 | 81 பயனாளிகள்

30.08.2026 அன்று ஈரோடு சித்தோடு ஸ்ரீ சத்ய சாய் பள்ளியில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் 39 ஆண்கள் மற்றும் 42 பெண்களுக்குக் கண்புரை பரிசோதனை செய்யப்பட்டதுடன், பள்ளி மாணவர்களுக்கும் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மொத்தம் 87 பேர் பயனடைந்தனர்.

அவர்களில் 17 ஆண்கள் மற்றும் 23 பெண்கள் என மொத்தம் 40 நபர்கள் கண்புரை அறுவை சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டனர்.





# சேவா வாணி

எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக

**ssssotnreporting@gmail.com**

முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

### முக்கிய இணைப்புகள்

**ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)**

**தமிழ்நாடு - தெற்கு**